**நீர் வளங்கள் சபை – 2016**

-----------------------------------------------

நீர் வளங்கள் சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1999 இன் 42 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்ட 1964 இன் 29 ஆம் இலக்க நீர் வளங்கள் சட்டத்தின் 17(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் நிதிக்கூற்றுக்களில் ஏற்படுத்தும் தாக்கங்களைத் தவிர, நிதிக்கூற்றுக்களானவை நீர் வளங்கள் சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

இராணுவத்தினால் சபைக்கு வழங்கியிருந்த ஜீப் வண்டியினை முறைசார் விதமாக உரித்தாக்கி நிதிக்கூற்றுக்களில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**2.2.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

கூட்டுத்தொகை ரூபா 28,168,520 தொகைக்கான கடன்பட்டோர் மற்றும் சேவை முற்பணங்கள் தொடர்பான மீதிகளை உறுதிப்படுத்தல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பெற வேண்டிய வர்த்தக கடன்பட்டோர் மீதி ரூபா 19,790,468 தொகையாகக் காணப்பட்டதுடன் அவற்றில் ரூபா 860,800 தொகை 03 வருடங்களை விட பழமை வாய்ந்த மீதிகளாக இருந்தன. மீதிகளை உறுதிப்படுத்தும் போது செயற்திட்டமொன்றிலிருந்து பெற வேண்டிய ரூபா 2,453,295 தொகை தொடர்பாக இணங்க முடியாது என அறவிக்கப்பட்டிருந்தது.

(ஆ) நபர்கள் 36 பேர் மற்றும் 47 நிறுவனங்களுக்கு பல்வேறு சேவைகள் நிறைவேற்றிக் கொடுத்தல் தொடர்பாக சபையினால் ரூபா 21,413,361 இற்கான முற்பணம் பெற்றிருந்தது. அம் முற்பணங்களில் இருந்து ரூபா 1,139,371 தொகையினை பெற்று ஒரு வருட காலத்தை மிகைத்திருந்த போதிலும் குறிப்பிட்ட வேலைகளை நிறைவேற்றி கொடுப்பதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**2.4 சட்டங்கள்விதிகள் , பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்**

பின்வரும் இணக்கமின்மைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள்விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் தொடர்பு | | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (அ) | 1964 இன் 29 ஆம் இலக்க நீர் வளங்கள் சட்டத்தின் மற்றும் 1999 இன் 42 ஆம் இலக்க திருத்தப்பட்ட சட்டத்தின் பிரிவுகள் 14(1) மற்றும் 14(2) | சட்டத்தில் காட்டப்பட்டுள்ள ஒரு விடயம் அல்லது அனைத்து விடயங்கள் தொடர்பாகவும் ஆலோசனைக் குழுவினால் சபைக்கு ஆலோசனை வழங்கப்பட வேண்டுமெனினும் மீளாய்வாண்டின் போது ஆலோசனை குழு நிறுவப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக மீளாய்வாண்டின் போது நடத்தப்பட்ட 11 ஆய்வு கற்கைகள், ஆலோசனைகளுக்காக குழுவின் கவனத்திற்காக கொண்டுவருவதற்கு முடியாதிருந்ததுடன் அதற்காக மேற் கொள்ளப்பட்ட ரூபா 25,003,000 தொகைக்கான ஆய்வுச் செலவுகள் நீர் வளங்கள் சபை சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் ஆலோசனை குழுவினால் அங்கீகரித்தலும் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | விஞ்ஞான ரீதியான உபகரணப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2013 ஜுன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் 9.7 ஆம் பந்தி | திறன் தொழில் உத்தியோகத்தர்கள் 28 பேருக்கு மீளாய்வாண்டின் போது சம்பளத்திற்கு மிகையாக ரூபா 2,519,200 இற்கான விஷேட படி செலுத்தியிருந்த போதிலும் அதற்காக திறைசேரிச் செயலாளரின் அங்கீகாரத்தை பெற்றிருக்கவில்லை. |

**3. நிதி மீளாய்வு**

**3.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2016 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் நிதி விளைவுகள் ரூபா 27,094,000 இற்கான மிகையொன்று காணப்பட்டதுடன் அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 99,400,000 தொகையாகக் காணப்பட்டமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 126,494,000 இற்கான வளர்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டிற்கான செலவு ரூபா 60,952,000 இனால் குறைவடைதல் மற்றும் செயற்பாட்டு தொழிற்பாடுகளின் மூலம் கிடைத்திருந்த வருமானம் ரூபா 49,409,000 இனால் அதிகரித்தல் மேற்கூறிய மிகை அதிகரிப்பதற்கு முக்கிய காரணமாகியிருந்தது.

மீளாய்வாண்டினதும் முன்னைய 04 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளின் பகுப்பாய்வு செய்யும் போது 2012 ஆண்டு முதல் 2015 ஆண்டு வரையான நிதி விளைவுகளில் பற்றாக்குறையொன்று காணப்பட்ட போதிலும் மீளாய்வாண்டின் போது மிகையொன்று ஏற்பட்டிருந்தது. எவ்வாறாயினும், நிதி விளைவுகளுக்கு ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறை அல்லாத சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு மீண்டும் சீராக்கல் செய்தபோது சபையின் பங்களிப்பு 2012 ஆண்டு முதல் ஆக்கபூர்வமாக முன்னேற்றமடைந்து மீளாய்வாண்டின் போது ரூபா 203,383,000 தொகையாகியிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

----------------------------------

### 4.1 செயலாற்றுகை

---------------------

1999 இன் 42 ஆம் இலக்க நீர் வளங்கள் சபையின் (திருத்திய) சட்டத்தின் 12 ஆம் பிரிவில் குறிப்பிட்டுள்ளவாறு சபையின் முக்கிய குறிக்கோள்கள் பின்வருமாறு.

(i) நாட்டின் நீர் வளங்களை பாதுகாத்தல் மற்றும் பயன்படுத்துதல் உட்பட அவற்றை நிருவகித்தல், முறைப்படுத்தல், அபிவிருத்தி செய்தல் மற்றும் நீர் வழிகள் மாசடைவதை தடுத்தல்.

(ii) நீர் வளங்களை பல்நோக்குடன் அபிவிருத்தி மற்றும் பயன்படுத்தல் வீட்டுத்துறை விடயங்கள் மற்றும் கைத்தொழில் விடயங்களுக்காக குறுகிய கால அடிப்படையில் மற்றும் நீண்ட கால அடிப்படையில் வளங்களை வழங்குதல், உப்புத் தன்மையை கட்டுப்படுத்தல் மற்றும் சமமான குறிக்கோள்களுடன் நாட்டின் நீர் வளங்களை நிருவகித்தல் மற்றும் பயன்படுத்துதல் தொடர்பாக தேசிய கொள்கைகளை தயாரித்தல்.

(iii) நாட்டின் நிலத்தின் கீழுள்ள நீர் வளங்கள் தொடர்பாக அரச நிறுவனங்களின் மூலம் மேற்கொள்ளப்படும் ஆய்வுகள், புள்ளிவிவர ரீதியான கணிப்பீடுகள், திட்டங்கள் மற்றும் பிரேரணைகளின் மீது அடிப்படையான அறிக்கைகளை பகுப்பாய்வு செய்தல்.

(iv) நிலத்தின் கீழ் உள்ள நீரினை உரிய முறைப்படி நிருவகித்தல், பொருளாதார ரீதியான பயன்படுத்தலுக்காக அரசாங்கத்தினால் எடுக்க வேண்டிய ஏனைய ஏதேனும் பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளல்.

மேற்கூறிய குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காக சபையினால் போதியளவு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(அ) மீளாய்வாண்டிற்கான வருடாந்த மதிப்பீட்டின் மூலம் 13 விடயங்களின் கீழ் 3692 ஆய்வு அலகுகள் நிறைவேற்றுவதற்கு திட்டமிட்டிருந்த போதிலும் முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் சபையினால் 2357 ஆய்வு அலகுகள் மாத்திரம் நிறைவேற்றியிருந்ததுடன் நிறைவேற்றப்படாத எண்ணிக்கை 1335 தொகையாக இருந்தது. சில விடயங்களின் நிறைவேற்றப்படாத எண்ணிக்கை 13 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது.

**(ஆ) ஆய்வு கற்கைகளை செயற்படுத்துவதில் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2010 ஆண்டு முதல் 2016 ஆண்டு வரை நீர் மீதான நிலைமை மற்றும் அவற்றில் பொது மக்களுக்கு ஏற்படும் தாக்கங்களைப் பரிசோதனை செய்வதற்காக ரூபா 587,531,400 இற்கான மதிப்பீட்டுக் கிரயத்திற்கு 11 ஆய்வுக் கற்கை செயற்திட்டங்கள் ஆரம்பித்திருந்ததுடன் 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அத்தொகையில் ரூபா 104,952,529 தொகை செலவிடப்பட்டிருந்தது. இந்த கற்கை செயற்திட்டங்களின் 08 இனை 2016 திசெம்பர் 31 திகதியளவில் பூர்த்தி செய்வதற்கு திட்டமிட்டிருந்த போதிலும் அந்த 08 செயற்திட்டங்களும் எதிர்பார்த்த விதமாக பூர்த்தி செய்வதற்கு முடியாமையினால் செயற்திட்டங்களின் மூலம் எதிர்ப்பார்த்த குறிக்கோள்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(ii) ஆய்வுக் கற்கைளுக்காக பொறுப்பாக சொல்ல வேண்டிய உத்தியோகத்தர்களின் ஆய்விற்கு முன்னரான அனுபவம், அவர்களின் கல்வி மற்றும் திறந்தொழில் தகைமைகள் என்பன கற்கை பிரேரணைகளில் அடங்கியிருக்காததுடன் எந்த ஆய்வு கற்கைகளும் அவ் ஆய்வு விடயம் தொடர்பாக தேர்ச்சி மற்றும் அனுபவமுள்ள ஆய்வாளர் ஒருவரின் மேற்பார்வை இடம்பெற்றிருக்கவில்லை.

(iii) ஆய்வுக் கற்கைகளை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்காக முழு நேர அடிப்படையில் ஆய்வு உத்தியோகத்தரொருவர் நியமனம் செய்யப்பட வேண்டுமெனினும் சபையினால் அனைத்து ஆய்வுக் கற்கைகளுக்குமாக ஆய்வு உத்தியோகத்தராக சபையின் பொது முகாமையாளர் நியமனம் செய்யப்பட்டிருந்தார். அவரது வழமையான கடமைகளுக்கு மேலதிகமாக ஆய்வு கற்கைகளில் பங்குபற்ற நேரிட்டுள்ளமையால் திட்டமிட்டுள்ள காலப்பகுதியில் ஆய்வுக் கற்கைகளை பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தது.

(iv) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ஆய்வுக் கற்கைகளுக்கான மதிப்பீட்டுத் தொகையில் நெருங்கியிருந்த நிதி முன்னேற்றம் 15 சதவீதம் முதல் 65 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டதுடன் அச் செயற்திட்டங்களின் தாமதக் காலம் 01 வருடம் முதல் 05 வருடங்கள் வரையாக இருந்தது. மேலும் ஆய்வு கற்கைகளை நீடிக்கும் போது அதற்காக காரணம் மற்றும் மதிப்பீடு என்பன காட்டப்பட்டிருக்கவில்லை.

**4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) வாகனம் ஒன்றிற்கு பயன்படுத்தியிருந்த என்ஜின் ஒன்றினை பொருத்திய பின்னர் அவ்விடயத்தை உரிய விதத்தில் செய்யப்பட்டதென உரிய அதிகாரிகளினால் சான்றுபடுத்தியிருக்காத போதிலும் ரூபா 290,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) நிதிக்கூற்றுக்கள் அடங்கியுள்ள ஏனைய நிறுவனங்களுக்குச் சொந்தமான 16 வாகனங்கள் சபை பயன்படுத்தியிருந்த போதிலும் அவ்வாகனங்களை உரித்தாக்குவதற்கு 2017 ஜூன் வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) சபையின் தலைமை அலுவலகம், இரத்மலான மற்றும் வவுனியா வேலைத்தளங்கள் மற்றும் அனுராதபுரம் சுற்றுலா பங்களா அமைந்துள்ள காணி மற்றும் கட்டிடங்களை சபைக்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்காததுடன் அக்காணிகளில் ரூபா 6,258,000 இற்கான தொகையொன்று செலவிடப்பட்டு கட்டிடங்கள் நிர்மாணித்தல் மற்றும் ஏற்கனவே காணப்பட்ட கட்டிடங்களை நவீன மயப்படுத்தலும் சபையினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**4.3 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள்**

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த இறுதி இருப்பில் ரூபா 231,071 பெறுமதியுடைய அசையாத இருப்பும் ரூபா 3,265,967 இற்கான காலங்கடந்த இருப்புக்களும் காணப்பட்டதென 2013 முதல் 2016 வரையான கணிப்பீட்டு சபை அறிக்கைகளின் மூலம் இனங்கண்டிருந்த போதிலும் அவை தொடர்பாக முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.4 பதவியணியினர் நிருவாகம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அமைய மற்றும் ஒப்பந்த அடிப்படையில் 66 ஊழியர்கள் சேர்க்கப்பட்டிருந்த போதிலும் அதற்காக முகாமைத்துவச் சேவை திணைக்களத்தின் அங்கீகாரத்தைப் பெற்றிருக்கவில்லை.

(ஆ) ஊழியர் ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு வழங்கும் நடைமுறையின் கீழ் ஒவ்வொரு பதவிகளுக்காகவும் வெவ்வேறான வினைத்திறமை காண் பரீட்சை சித்தியடைய வேண்டியிருந்த போதிலும் குறிப்பிட்டுள்ள வினைத்திறமை தடைகான பரீட்சை நடாத்தாமல் சம்பள அதிகரிப்பு வழங்கப்பட்டிருந்ததுடன் உயர் பதவிகளுக்காக பதவி உயர்வுகளும் வழங்கப்பட்டிருந்தது.

**4.5 ஏனைய அரச நிறுவனங்களுக்கு வழங்கியிருந்த சபையின் வளங்கள்**

2003 ஜூன் 02 திகதிய பீஈடி/12 இலக்கங் கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.3.9 ஆம் பிரிவுக்கு முரணாக சபையின் பங்களிப்பை நிறைவேற்றுவதற்காக சேர்க்கப்பட்டிருந்த 05 ஊழியர்கள் வேறு நிறுவனங்களின் கடமைக்காக 2015 ஆண்டு முதல் விடுவிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது அவ் ஊழியர்களுக்கு ரூபா 1,354,613 தொகை மற்றும் முன்னைய ஆண்டின் போது ரூபா 816,897 தொகை சம்பளம் மற்றும் படியாக சபையினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**5. கணக்களிப்பொறுப்பு மற்றும் நல்லாளுகை**

**5.1 உள்ளகக் கணக்காய்வு**

உள்ளகக் கணக்காய்வு பிரிவு நிறுவப்பட்டிருந்த போதிலும் தொழிநுட்ப மற்றும் பொறியியல் நுட்ப முறைகளை பயன்படுத்தும் சபையின் கருமங்களை கணக்காய்வு செய்வதற்கான தகைமையுடைய உத்தியோகத்தர்கள் போதியளவு எண்ணிக்கையானவர்கள் இணைக்கப்பட்டிருக்கவில்லை.

**5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு**

பாதீட்டு வருமானம் மற்றும் செலவுகள் மற்றும் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவுகளுடன் இணக்கஞ் செய்யும் போது 98 விடயங்களில் 20 சதவீதம் முதல் 453 சதவீதம் வரையான வீச்சில் முரண்கள் காணப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாக பயன்படுத்தியிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

**5.3 செயல் நடவடிக்கைத் திட்டம்**

சபையினால் 2016 ஆண்டின் போது மேற்கொள்ளப்பட வேண்டிய ஒட்டுமொத்த தொழிற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பான செயல் நடவடிக்கைத் திட்டம் ஒன்று தயாரித்திருந்த போதிலும் அதற்கு இணங்க ஒப்பீடு செய்யக்கூடிய விதத்தில் பாதீட்டு மதிப்பீடு மற்றும் பெறுகைகள் திட்டம் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**5.4 தீர்க்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்**

06 வருட கட்டாய சேவைக்காலத்திற்கு மற்றும் ரூபா 1,308,699 இற்கான பிணை முறியொன்றின் கீழ் 2005 ஆண்டின் போது புலமைப்பரிசில் ஒன்றிற்காக வெளிநாடு சென்றிருந்த பெண் புவிச்சரிதவியலாளர் ஒருவர் புலமைப் பரிசிலின் பின்னர் உடன்பட்ட சேவைக்காலத்தை பூர்த்தி செய்வதற்கு முன்னர் வேறு நிறுவனம் ஒன்றிற்கு விடுவிக்கப்பட்டிருந்தார். அவ்விடுவித்தலுக்காக 04 வருட கால கட்டாய சேவைக் காலத்திற்கு மற்றும் ரூபா 435,600 இற்கான பிணை முறியொன்றிற்கு கையொப்பமிடப்பட்டிருந்தது. பெண் உத்தியோகத்தர் உடன்பட்டிருந்த 02 உடன்படிக்கைகளுக்கு இணங்க செயற்படாமல் 2011 ஆண்டு முதல் சபையின் சேவையில் இருந்து நிரந்தரமாக விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் உடன்படிக்கைகளின் பிரகாரம் சபைக்குக் கிடைக்க வேண்டியிருந்த ரூபா 1,744,299 இற்கான பிணை தொகையை மீளாய்வாண்டு இறுதி வரை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு குறைபாடுகள் அவ்வப்போது சபையின் தலைவரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதுடன் பின்வரும் கட்டுப்பாட்டு பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்பு | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | கணக்கீடு | சொத்துக்களை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்காமை மற்றும் வருமானங்கள் மற்றும் செலவுகள் உரிய முறையில் கணக்கீடு செய்யாமை. |
| (ஆ) | பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள் | தீர்ப்பதற்காக ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்காமை. |

| | | |
|---|---|---|
| (இ) | ஆய்வுக் கற்கைகள் மேற்கொள்ளல் | திட்டமிட்டுள்ளவாறு ஆய்வுக் கற்கைகளை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமை. |
| (ஈ) | சொத்துக்கள் கட்டுப்பாடு | நடைமுறை அல்லாத சொத்துக்களை ஆவணப்படுத்துவதற்காக நடவடிக்கைகள் எடுக்காமை. |